# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/19 - 2017 ජූලි මස 25 වැනි අඟහරුවාදා - 2017.07.25

*2029/19 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: கேஎச்டீஎஸ்/எல்என்டீ/04/ஏசீகிவ்/11.
காணி அமைச்சின் இல.: எல்டீ/05/2009/வீர்/305.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் : கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக காணி எடுத் துக் கொள்ளல்.**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கஹவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், பன்னில்பத்துவ சிறு பிரிவில், பன்னில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபடத்தில் இல. 701, பிற்சேர்க்கை இல. 24, தாள் இல. 24 மற்றும் 2015.01.19 ஆந் திகதிய ஆரம்ப கிராம வரைபடத்தின் துண்டு இல. 804 எனக்காட்டப்பட்ட 1.9141 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரம் பின்வருமாறு:

**1. துண்டு இல. 804**
காணியின் பெயர் : நாலிகெவத்தை ; விபரம்: வெள்ளத்தினாலும் மண்சரிவினாலும் இடம்பெயர்ந்த குடும்பங்களை குடியேற்றுவதற்காக கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் காணி எடுத்துக்கொள்ளல் ; உரிமை கோருபவர் : பணிப்பாளர், காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 1.9141 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கஹவத்தை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. ரீ. கயானி ஐ. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கஹவத்தை.

பிரதேச செயலகம்,
கஹவத்தை,
2017, யூலை 19.

*8 - 297*


1A - G 25963 - 17 (2017/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*